*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 333/2020***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-3 (LW-1)***

*Name / Father's Name:* ***திரு.சண்முகம் த/பெ. குப்புசாமி***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **10.06.2025.**

துவக்க நேரம் 04.05 A.N

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது திருவண்ணாமலை வனக்கோட்டத்தில் செய்யார் சமூக வனக்காடு பகுதியில் வனவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 08.04.2018 அன்று நான் கல்ராயன் வனச்சரகத்தில் வனக்காப்பாளராக பணிபுரிந்தபொழுது, அன்றைய தினம் எனது வனச்சரக அலுவலருக்கு கிடைத்த ரகசிய தகவலில் பெரியதீ பிடித்து எறிவதாக சொன்னதன் பேரில், கரியகோயில் பீட், சூலாங்குறிச்சி, காப்புக்காடு பிளாக்– 5 என்ற இடத்தில் சென்று பார்த்தபொழுது, அங்கு தீ எறிந்துகொண்டிருந்தது. அதை அணைப்பதற்காக நாங்கள் முயற்சி செய்துகொண்டிருந்தோம்.

2) அந்த சமயத்தில் அங்கிருந்து இரண்டு நபர்கள் ஓடினார்கள். நாங்கள் தீயை அணைப்பதுதான் முக்கியம் என்று முதலில் தீ அணைக்கும் வேலையை பார்த்தோம். அந்த இடத்திற்கு அருகில் இருந்த சில பொதுமக்களும் எங்களுக்கு தீயை அணைக்க உதவி செய்தனர்.

3) மேற்படி இடத்தில் தீ எப்படி பற்றியது என்பதுபற்றி விசாரித்துக்கொண்டிருந்தபொழுது, தலக்கரை கிராமத்தை சேர்ந்த பவுல்தாஸ் த.பெ ஜான், அவரது தம்பி பாக்கியராஜ் ஆகிய இருவரும்தான் அந்த இடத்தில் தீ வைத்ததாக சொன்னார்கள்.

4) கடந்த 11.04.2018 ம் தேதி மேற்படி பவுல்தாஸ் மற்றும் பாக்கியராஜ் ஆகிய இருவரும் வீட்டில் இருப்பதாக கிடைத்த தகவலின் பேரில் அங்கு சென்று, அவர்களை பார்த்து விசாரித்தவுடன், அவர்கள் அவர்களது குற்றத்தை ஒப்புக்கெண்டார்கள். பிறகு அவர்களை, எங்களது அலுவலகத்திற்கு அழைத்துவந்து, அவர்களிடம் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்து, ஸ்தல மகஜரும் தயார் செய்தோம்.

5) அந்த தீயானது சுமார் 4 ஏக்கர் அளவிற்கு பற்றி அதிலிருந்த பலஜாதி மரங்கள், மூங்கில், விதைச்செடிகள் அனைத்தும் அழிந்து, அரசுக்கு அதிக அளவில் இழப்பு ஏற்பட்டுள்ளது. மேலும் இவ்வாறு வேறு எதுவும் சம்பவம் நடக்காத வண்ணன் எதிரிகள் இருவரையும், நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்தோம். பிடிபொருள் எதுவும் இவ்வழக்கில் பிடிபடவில்லை. அந்த பிடிபொருட்களும் அந்த தீயில் எறிந்து சாம்பாலாகிவிட்டது. வனச்சரக புலன் விசாரணை அதிகாரி மேற்படி விசாரித்தபொழுது, நாங்கள் அவருடன் இருந்து உதவி செய்தோம்.

**குறுக்கு விசாரணை**

1) சம்பவயிடத்தில் பிடிபொருள் அனைத்தும் எறிந்து சாம்பாலாகிவிட்டது என்று சொல்லியுள்ள நிலையில், எறிந்தும், எறியாமலும் இருந்த ஏதேனும் பொருளை கைப்பற்றினோமா என்றால் இல்லை. பிடிபொருள் எறிந்துவிட்டதாக சொல்லும் சாம்பலையும் மகஜரில் கைப்பற்றவில்லை என்றால் சரிதான்.

2) நாங்கள் ஊரில் சென்று விசாரித்தபொழுது எதிரிகள்தான் அந்த காட்டில் தீ வைத்ததாக சொல்லியுள்ள நிலையில், எதிரிகளை அடையாளம் கூறி, அவர்களின் பெயர்களை கூறிய நபர்களிடம் நாங்கள் வாக்குமூலம் பதிவு செய்து, அவர்களை இவ்வழக்கில் சாட்சிகளாக சேர்த்துள்ளோமா என்றால் இல்லை.

3) ஒப்புதல் வாக்குமூலத்தை எங்கு வாங்கினோம் என்றால் எங்கள் அலுவலகத்தில் வைத்துதான் வாங்கினோம். எதிரிகளை எந்த இடத்தில் கைது

செய்தோம் என்றால் தலக்கரை கிராமத்தில் கைது செய்தோம். எதிரிகளை கைது செய்த இடத்தை இவ்வழக்கு ஆவணங்களில் குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரிகளை கைது செய்த இடத்தில் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றோமா என்றால் எதிரிகளை விசாரணையின்பேரில் தலக்கரையில் இருந்து எங்கள் அலுவலகத்திற்கு அழைத்துவந்து, எதிரிகளிடம் கருமந்துறை வனச்சரக அலுவலகத்தில் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றுதான், அவர்களை கைது செய்தோம்.

4) கடந்த 11.04.2018 ம் தேதி எதிரிகளை கைது செய்து ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டதாக சொல்லியுள்ள நிலையில், என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் இன்று 08.04.2018 தேதி மாலை சுமார் 05.00 மணியளவில் என்று குறிப்பிட்டு குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது இவ்வழக்கிற்காக எங்கள் அலுவலகத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. உண்மையில் எதிரிகள் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை கொடுத்திருந்தால், மேற்படி தவறு ஏற்பட்டிருக்க வாய்ப்பில்லை என்று சொன்னால் சரியல்ல.

5) ஸ்தல மகஜர் எந்த தேதியில் தயாரிக்கப்பட்டது என்றால் 11.04.2018 ம் தேதிதான் தயாரிக்கப்பட்டது. இதிலும், இன்று 08.04.2018 தேதி என்று குறிப்பிட்டு ஸ்தல மகஜர் தயாரிக்கப்பட்டுள்ளது இவ்வழக்கிற்காக எங்கள் அலுவலகத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

6) இவ்வழக்கில் தீப்பிடித்து எறிந்ததாக சொல்லப்படுவதற்கும், எதிரிகளுக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எதிரிகள்தான் தீ வைத்ததாக யாரும், எங்களிடம் எந்த தகவலும் சொல்லவில்லை என்றும், அரசாங்கத்திலிருந்து காட்டில் தீப்பிடித்தற்கு எங்களிடம் காரணத்தை கேட்டதால், நாங்கள், எதிரிகள் மீது பொய்யாக இவ்வழக்கினை பதிவு செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

7) எதிரிகள், எங்களிடம் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றும், சம்பவயிடத்தில் மகஜர் ஸ்டேட்மென்ட் தயாரிக்கவும் இல்லை என்றும், அதனால்தான் நாங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் ஒயிட்னர் வைத்து அழித்து இவ்வழக்கிற்கு ஏற்றவாறு ஆவணங்கள் தயார் செய்து, எங்களது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து, எதிரிகள் மீது பொய் வழக்கினை தாக்கல் செய்துள்ளோம் என்றும் சொன்னால் சரியல்ல.

8) காட்டில் அழிந்ததாக சொல்லப்படும் சொத்தின் மதிப்பு ரூ.2,00,000/– என்று நாங்கள் சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இவ்வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கில் ஒப்படைத்துள்ள ஆவணங்கள் அனைத்தும் இவ்வழக்கிற்காக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

முடிவு நேரம் 04.34 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2025.06.10 17:10:24 +0530

Judicial Magistrate No.2, Attur.